அரசுத் துறையில் ஸ்டவ் தொழிற்சாலை ஏற்படுத்துதல்.

129—(* வினா எண். 3045) திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமையல் வாயுவினால் எரியும் ஸ்டவ்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத்துறையில் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் இல்லை.

சென்னை மாநகராட்சி மோட்டார் வாகன வரி

130—(* வினா எண் 3256) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்கு மோட்டார் வாகன வரியாக (Taxation Fees) வசூலிக்கப்படும் தொகையிலிருந்து சாலைகளைப் பழுது பார்ப்பதற்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மோட்டார் வாகன வரியினை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்திடுவது பற்றி தற்பொழுது இருந்துவரும் முறையை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து மாநிலத்தின் நிதிநிலை சீர்குலையாமல் இருக்கும் பொருட்டும், தற்பொழுது இருந்துவரும் முறை சீராக நடைபெற்று வருவதால் இம்முறையை தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு ? அரசு வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

1987 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொத்தமான கணக்கு இல்லை. எனவே தனித் தனியாகச் சொல்ல வாய்ப்பு இல்லை. இதைப் பகிர்ந்துகொள் வது எப்படி என்றுதான் இருக்கிறது. இதற்கான மொத்தக் கணக்கு என்னிடம் இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சென்னை மாநகரத்தில் கார்ப்பரேஷன் பஸ்கள் நிறையச் செல்கின்றன. அதனால் சாலை பாதிப்பு அதிகமாக ஏற்பட்டி ருக்கிறது. அவற்றைச் சரி செய்ய, போக்குவரத்துக் கழகத்தில் சூழல் நிதி ஏற்படுத்தி, சாலை சீரமைப்புப் பணிகளை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது மக்களுக்கு ஆங்காங்கே போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தருவதுதான் போக்குவரத்துக் கழகங்களின் கடமை. பாதைகளைப் பராமரிக்க தனித் தனித் துறைகள் இருக் கின்றன. அந்தப் பொறுப்பை மாநகராட்சிதான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போக்குவரத்துக் கழகங்களின்மீது சுமத்தினால், இந்தப் பணி நடக்காமல் வேறு ஏதாவது பணிதான் நடந்துகொண்டிருக்கும். எனவே அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லை.

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு உதவிப் பணம்.

131—(* வினா எண் 4755) **திரு. கே. எம். தங்கமணி, திரு. ஆர். ரெங்கசாமி, திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. கே. உச்சி:** மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகிகளுக்கு அரசு வழங்கும் உதவிப்பணத்தை அதிகமாக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) இதுவரை உதவிப்பணம் கோரி வந்த மனுக்களுள் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?